**IN THE COURT OF THE METROPOLITAN MAGISTRATE, (CCB & CBCID CASES), EGMORE, CHENNAI-8.**

**CC.No.15107/2022** **Date:21.06.2025**

**Deposition of Witness** : **PW-1(LW-1)**

**Name** : சுலோச்சனா(வயது80/2025)

**Husband Name** : குமாரசாமி

எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை

ஜானகி எனது அக்கா. என்னுடன் பிறந்தவர்கள் மொத்தம் 5 நபர்கள். ஜானகிக்கு திருமணம் ஆகவில்லை. ஜானகியை தவிர மற்ற 4 நபர்களுக்கும் திருமணம் ஆகிவிட்டது. எனக்கு தத்தெடுத்த ஒரு ஆண் குழந்தை உள்ளார். நானும் எனது கணவரும் தற்போது தனியாக தான் இருந்து வருகிறோம். நான் தற்போது சோழிங்கநல்லூரில் வசிக்கிறேன். எனது அக்கா ஜானகி அண்ணாநகரில் இருந்தார்.

ஜானகியுடன் வேறு யாரும் இல்லை. அவர் தனியாக தான் இருந்தார். எதிரிகளை எனக்கு தெரியும். எதிரி துளசிதரனின் அப்பாவும், நானும் ரயில்வேயில் ஒன்றாக வேலை பார்த்தோம். துளசிதரனை எனக்கு அவர் பள்ளி செல்லும் பருவத்திலிருந்து தெரியும். துளசிதரன் மற்றும் அவரது அப்பாவும் எனது அக்கா தனியாக இருந்த காரணத்தினால் சென்று வருவார்கள் என்றால் சரிதான். துளசிதரன் எனது அக்காவுடன் 15-20 வருடமாக அவருக்கு உதவியாகவும், போக வர பழக்கமாகவும் இருந்தார்.

அப்போதெல்லாம் துளசிதரனிடம் எங்கள் குடும்பத்தில் உள்ள அனைவரும் பேச்சுவார்த்தையில் இருந்தோம். எனது 60வது திருமணத்தின் போது எதிரி வந்திருந்தார். எனது அக்கா ஜானகி வீட்டிற்கு 1 வருடத்தில் 4, 5 முறை போக வர இருப்போம். அப்போது துளசிதரனை பார்ப்போம். எனது அக்கா உடல்நிலை சரியில்லை என்றாலோ மற்றும் உதவிகளை துளசிதரன் தான் பார்த்து வந்தார் என்றால் நாங்களும் பார்த்துவந்தோம்.

2008 ல் எனது அக்கா துளசிதரனுக்கு செட்டில்மெண்ட் எழுதிக்கொடுத்த விவரத்தை எப்போதோ ஒரு முறை சொன்னார். எனது அக்காவிடம் ஏன் துளசிதரனுக்கு சொத்தை எழுதிவைத்தாய் என்று கேட்டேனா என்றால் நீண்ட

நாட்கள் ஆகிவிட்டதால் ஞாபகத்தில் இல்லை. ரெப்கோ வங்கியில் கடன் பெற்ற தான் எதிரி வீட்டை புதுப்பித்து கட்டினார் என்றால் 2015 வரை கடன் எதுவும் வாங்கவில்லை என்று தான் சொன்னார். 2015 வரை வீடு புதுப்பிக்கப்பட்ட விவரம் எனக்கு தெரியாது, அதன் பிறகு எனது சகோதரியை நான் அழைத்துசென்ற போது தான் எனது சகோதரி சொல்ல எனக்கு தெரியவந்தது.

2008 ல் எனது அக்கா செட்டில்மெண்ட் எதிரிக்கு செய்துவிட்டார் என்றும், 2011 ல் வீடு புதுப்பிக்கப்பட்டது போன்ற விவரங்கள் 2015 வரை எனக்கு தெரியாது என்றால் சரிதான். 2–3 வருடங்கள் துளசிதரன் வீட்டில் எனது அக்கா இருந்தார். 3 வருடமாக துளசிதரன் எனது அக்காவை அவரது வீட்டில் பூட்டில் வைத்திருந்தார். அந்த 3 வருடங்களில் எனது அக்காவை நான் பார்க்கவும் இல்லை, போன் பேசவும் இல்லை என்றால் சரிதான். எனது அக்காவை 3 வருடம் பார்க்க முடியவில்லை, பேசவில்லை என்று புகார் எதுவும் காவல்நிலையத்தில் கொடுக்கவில்லை. அந்த சமயத்தில் துளசிதரனுடன் தான் எனது அக்கா உள்ளார் என்ற விவரம் தெரியும்.

எனது சகோதரி சௌகரியமாக துளசிதரனுடன் இருந்த காரணத்தினால் தான் நான் பார்க்காமல் இருந்தேன் என்று சொன்னால் சரியல்ல. 2015 ல் எனது அக்காவை துளசிதரனிடம் இருந்து அழைத்து சென்று எங்களது வீட்டில் தான் வைத்திருந்தோம். எனது சகோதரியை அழைத்து சென்ற போது அவரை கொடுமைப்படுத்தியதாக நான் சொல்லுகின்ற நிலையில் அருகில் இருந்த காவல்நிலையத்தில் புகார் கொடுத்தோமா என்றால் எனது சகோதரிக்கு உடல்நிலை சரியில்லாமல் வாந்தி எடுத்து வந்த காரணத்தினால் ஒரு மாதம் கழித்து புகார் கொடுத்தோம்.

எனது சகோதரியை எங்களது வீட்டிற்கு அழைத்து வந்த பிறகு எதிரி துளசிதரனிடம் செல்போன் மூலமாக கடன் பற்றி கேட்டோம். அப்போது தான் அவரது பெயரில் உள்ள ஆவணங்களை எங்களுக்கு அனுப்பிவைத்தார். சாட்சி தானாக வீட்டு சாவியை கொடுங்கள் என்று கேட்டதாகவும், ஆனால் அவர்கள் இதுநாள் வரையிலும் கொடுக்கவில்லை என்று கூறுகிறார். எனது அக்கா

சொத்தை எழுதிக்கொடுத்திருக்கிறார், அந்த சொத்தை ஆளுக்கு பாதி எடுத்துக்கொள்வோம் என்று நானும், எனது கணவரும் எதிரிகளிடம் கேட்டோம் என்றால் இல்லை. அவ்வாறு நாங்கள் கேட்டோம் என்றும், அதை எதிரிகள் கொடுக்க மறுத்த காரணத்தினால் தான் எனது அக்காவை வைத்து பொய்யான புகார் அளித்தோம் என்று சொன்னால் சரியல்ல.

எதிரி ரெப்கோ வங்கியில் வீட்டின் பேரில் வாங்கிய கடனில் எனது அக்காவும் ஒரு கூட்டு கடன்தாரராக கையொப்பம் இட்டுள்ளார் என்று சொன்னால் அதைப்பற்றி எனக்கு தெரியாது. எனது அக்கா கொடுத்த புகாரின் அடிப்படையில் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டதா என்றால் சரியாக தெரியவில்லை. எனது அக்கா அம்பத்தூர் நீதிமன்றத்தில் ஏற்கெனவே தாக்கல் செய்த வழக்கை பற்றி எனக்கு தெரியாது.

A CHELLAPANDIAN Digitally signed by A CHELLAPANDIAN

சிறப்பு பெருநகர குற்றவியல் நடுவர்,
சிசிபி மற்றும் சிபிசிஐடி வழக்குகள் நீதிமன்றம்,
எழும்பூர், சென்னை–08.